# விஜயலட்சுமி விழுந்து காணாமல் போன ஜாலான் மஸ்ஜிட் இந்தியா முழுமையாக திறக்கப்பட்டது




கோலாலம்பூர், ஜன. 2-

இந்திய பிரஜை ஒருவர் எட்டு மீட்டர் ஆழ புதைக்குழி ஒன்றில் விழுந்து காணாமல் போன சம்பவத்தின் காரணமாக மூடப்பட்டிருந்த தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியா சுமார் நான்கு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் முழுமையாக திறக்கப்பட்டுள்ளது.

பக்கம் 13

**முதல்பக்கத் தொடர்ச்சி...**

## விஜயலட்சுமி விழுந்து....

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவை மீண்டும் திறந்திருப்பதன் வாயிலாக அப்பகுதி பாதுகாப்பானது, நிலையானது, வசதியானது என்பதை உறுதி செய்வதில் தங்களின் அர்ப்பணிப்பை காட்டுவதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஓர் அறிக்கையில் கூறியுள்ளது.

அப்படியே அங்கு மேலும் ஒரு புதைக்குழி தென்படுமேயானால் பொதுமக்கள் மாநகர் மன்றத்திடம் புகார் செய்யலாம். கடந்த நவம்பர் மாதம் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவின் ஒரு பகுதி பொதுமக்களுக்கு திறக்கப்பட்டது. ஜாலான் மஸ்ஜிட் இந்தியா போலீஸ் சாவடிக்கு அருகில் உள்ள மற்றும் வர்த்தக மையங்களுக்கு இடையே உள்ள இடைவழி ஆகியன இவற்றில் அடங்கும்.

அப்பகுதியில் பழுது பார்க்கும் பணிகளும் மண் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்ட பிறகு அது திறக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதி, விஜயலட்சுமி என்ற இந்திய பிரஜை ஒருவர் மலாயன் மென்ஷன் வெளியே திடீரென ஏற்பட்ட புதைக்குழியில் விழுந்தார். அவருக்காக தேடும் பணிகள் ஒன்பது நாட்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், அவர் கண்டுபிடிக்கப்படாத நிலையில் ஆகஸ்ட் 31 ஆம் தேதி அந்நடவடிக்கை கைவிடப்பட்டது.

தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டோர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியின் பாதுகாப்பு கருதி அந்நடவடிக்கை கைவிடப்படுவதாக பிறகு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதி அவ்வப்போது கண்காணிக்கப்படும் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்துள்ளது. மீண்டும் இதுபோன்ற சம்பவம் நிகழாதிருப்பதை உறுதி செய்வதற்கு பூமிவியல் சோதனைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தின் 1 கோடி வெள்ளி நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்படும் என அது குறிப்பிட்டது.